செ. கு. எண்: 099 நாள் : 18.07.2016

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா**

அவர்களின் அறிக்கை – **18.7.2016**

கிருஷ்ணகிரி மாவட்டம், **கெலவரபள்ளி நீர்த்தேக்கத்திலிருந்து** வலது மற்றும் இடது பிரதான கால்வாய் மற்றும் கிளைக் கால்வாய்களில் முதல்போக புன்செய் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, கிருஷ்ணகிரி மாவட்டம், **கெலவரபள்ளி நீர்த்தேக்கத்திலிருந்து** வலது மற்றும் இடது பிரதான கால்வாய் மற்றும் கிளைக் கால்வாய்களில், முதல்போக புன்செய் பாசனத்திற்காக **19.7.2016 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள **8,000 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**